30th June 1962]

திரு. முனு ஆதி: கடந்த அமைச்சரவையில் ஸ்தல ஸ்தாபன அமைச்சராக இருந்த திருமதி லூர்தம்மாள் சைமன் அவர்கள் தாம்பரம் போன்ற இடத்தை 1962-ம் ஆண்டில் முனிசிபாலிட்டியாக மாற்றுவதாக உறுதி அளித்திருக்கிறார். அந்த உறுதி எந்த அளவில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அதைப்பற்றி ஏற்கெனவே பதில் சொல்லி இருக்கிறேன். அல்லி நகரம் உள்பட பரிசிலனையில் இருக்கிறது. இன்னும் மற்ற பெரிய பஞ்சாயத்துக்களும் பரிசிலனையில் இருந்து வருகிறது. பரிசிலனை முடிந்த பிறகு அவைகளைப் பற்றி முடிவு எடுக்கப்படும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: ஏற்கெனவே சொல்லியபடி நெல்லிக்குப்பம் முனிஸிபாலிட்டியாக ஆக்கப்படும் என்று கனம் அமைச்சர் அவர்கள் பொதுக் கூட்டங்களில் சொல்லி இருக்கிறார்களே. அதன்படி அது எப்பொழுது அமுலுக்கு வரும் என்பதை அறிய விரும்புகிறேன். அதைப்பற்றி பொதுக் கூட்டங்களில் சொன்னதால் பொது மக்கள் அதைப்பற்றி அறிய ஆவலாக இருக்கிறார்கள். அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். ஆகவே நெல்லிக்குப்பத்தை எப்பொழுது முனிஸிபாலிட்டியாக ஆக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: முனிசிபாலிட்டியாக மாற்றுவதாக இருந்தால் அங்கு இருபதாயிரம் ஜனத்தொகை இருக்க வேண்டும். மற்றும் ஒரு லட்சம் ரூபாய்க்கு அதிகப்படியாக வருவாய் வரக்கூடியதாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அதை நகராட்சியாக மாற்றுவது நியதி. அந்த முறையில் இருந்தால் முனிஸிபாலிட்டியாக மாற்றலாம். ஆனால் தனிப்பட்ட முறையில் நெல்லிக்குப்பத்தை மாற்றுவது என்றால் அது நான் சொன்னதாக பத்திரிகைகளில் வந்தால் அது தவறான செய்தியாக இருக்கலாம் என்று நினைக்கிறேன். மற்றும் அதை நகராட்சிக்குக் கொண்டு வரவேண்டும் என்று சொன்னால் அதைப் பற்றி சர்க்கார் கவனம் எடுத்துக்கொள்ளும். அதன் பிறகு அதைப்பற்றி பரிசீலிக்கப்படும்.

கோத்தகிரி ஆஸ்பத்திரி

***58 கேள்வி.—திரு. ஜே. மாதா கவுடர்:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோத்தகிரி ஆஸ்பத்திரிக்கு 1960-61-ம் ஆண்டுக்கு மருந்து செலவுக்காக எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டது?

(இ) எத்தனை பேர்களுக்கு மருந்து கொடுக்கப்பட்டது?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM: (அ) Rs. 12,000 Sir.

[30th June 1962

(இ) The total number of patients treated during the period from 1st April 1960 to 31st March 1961 is 39,907, i.e. 2,401 in-patients and 37,506 out-patients.

திரு. ஜே. மாதா கவுடர்: கோத்தகிரி ஆஸ்பத்திரிக்கு என்று மருந்துக்காக ஒதுக்கப்பட்ட தொகையானது தலைக்கு நாலணாவுக்கு கிட்டத்தட்ட மருந்து வாங்கிக்கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. இது ரொம்பவும் குறைவான தொகை என்று நான் கருதுகிறேன். எந்த மருந்தைக் கேட்டாலும் அந்த ஆஸ்பத்திரியில் இல்லை என்றுதான் சொல்லுகிறார்கள். அந்த ஆஸ்பத்திரிக்கு அதிகப்படியான தொழிலாளர்கள் வருகிறார்கள். அவர்களுக்கு மருந்து கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. எந்த மருந்தைக்கேட்டாலும் அவர்களுக்கு இல்லை என்று சொல்லுவது சரியல்ல. இது சம்பந்தமாக பல புகார்கள் வந்திருக்கின்றன. அவைகளையெல்லாம் பரிசிலிக்க வேண்டும். தொழிலாளர்கள் அடங்கிய பெரிய பகுதி அது. ஆகவே அந்த ஆஸ்பத்திரிக்கு அதிகப்படியான தொகை ஒதுக்க வேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: கனம் அங்கத்தினருடைய யோசனை பரிசிலிக்கப்படும்.

Ramanathapuram District Board

* 59 *Q.*—Sri S. MADHAVAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) when the District Board of Ramanathapuram was dissolved;

(*b*) the total outstandings of that Board as on the date of dissolution;

(*c*) the total outstandings of that Board as on 31st December 1961;

(*d*) the total outstandings of that Board to contractors as on 31st December 1961; and

(*e*) the reasons for not paying the outstandings so far?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (*a*) 2nd October 1961.

(*b*) Rs. 22,02,098.

(*c*) Rs. 21,60,518.

(*d*) Rs. 3,37,028.

(*e*) On the abolition of the District Board payments of outstanding liabilities of the District Board had temporarily to be suspended in order to ensure proper compilation of the accounts of the defunct District Board and to take stock of its contingent liabilities. Orders were subsequently issued on 19th February 1962 authorising the Collectors to operate on the funds of the defunct District Board. Since the issue of orders, the Collector of Ramanathapuram has been taking necessary action to clear off the outstanding payments of the defunct District Board.